வட மாகாண சபை

2027 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

NP/09/A&P/08/13/ROCS.Gen/2026

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு தேவையான 2027 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக** பதிவு செய்ய விரும்பும் **யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **2026 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2027 யூலை மாதம் அரையாண்டுக்கான மேலதிக பட்டியல் வெளியிடப்படவுள்ளதால் முடிவுத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் 2027 யூலை மாதம் வெளியிடப்படும் அரையாண்டுக்கான மேலதிக பட்டியலில் உள்வாங்கப்படும். விண்ணப்படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்**. எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணத்திறைசேரி** அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விபரங்களுக்கு கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம். அவர்களுடன் தொலைபேசி இல. **0212213540** மூலம் தொடர்பு கொள்ளவும்.

பிரதம செயலாளர்
வட மாகாண சபை
மாகாணசபை வளாகம்
A9 வீதி, கைதடி
யாழ்ப்பாணம்